**அல்லாஹ்வின் கட்டளை**

وَاَطِيْعُوا اللّٰهَ

وَالرَّسُوْلَ

لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ۝

மேலும் உங்களுக்குக் கருணை காட்டப்படும் பொருட்டு நீங்கள் அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். (3:133)

بسم الله الرحمن الرحيم  نحمده ونصلى على رسوله الكريم  وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 36

ஆசிரியர் முஸ்லம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

05 முஹர்ரம் 1441 ஹிஜ்ரி கமரி 05 தபூக் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

05 செப்டம்பர் 2019


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**திருக்குர்ஆன் எத்தகைய ஞானம் நிறைந்த முழுமை பெற்ற வேதம் என்றால் அது எல்லாவற்றையும் சுயமே விளக்கக் கூடியதாக இருக்கின்றது. மேலும் அனைத்து வித தேவைகளுக்கான பொருட்களையும் தன்னுள் கொண்டுள்ளது. அது அனைத்து விதத்திலும் ஓர் அடையாளமாக இருக்கின்றது. எவர் ஒருவராவது இதனை மறுத்தால் பிறகு நாம் அனைத்து அம்சங்கள் மூலமாகவும் இதன் அற்புதத்தை நிரூபித்துக் காட்டுவதற்கும், வெளிப்படுத்திக் காட்டுவதற்கும் ஆயத்தமாக இருக்கின்றோம்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

## நமது நபி (ஸல்) அவர்களது அற்புதங்கள்

நமது நபி (ஸல்) அவர்களுக்கு எல்லா அற்புதங்களும் கிடைத்திருந்தன. நாம் அன்னாரது கண்ணியம் தொடர்பாக எதைத்தான் எடுத்துக்கூற முடியும். எத்திசையில் பார்த்தாலும் எண்ணற்ற அற்புதங்கள் கிடைக்கும்... வெளிப்படையான அற்புதமான சந்திரன் பிளப்பது போன்ற இவ்வாறான அற்புதங்களின் எண்ணிக்கை மூன்றாயிரத்தை விட அதிகமாகும். மேலும் ஞானம் மற்றும் உண்மைத்துவத்தின் அற்புதத்தால் திருக்குர்ஆன் நிரம்பி காணப்படுகிறது. மேலும் அது எல்லா நேரமும் புத்தம் புதியதாக இருக்கிறது. நல்லொழுக்கத்தின் அற்புதத்தில் சுயமே இந்த பரிசுத்த நபி (ஸல்) அவர்களின் இருப்பு اِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ என்பதற்கு சான்றாக திகழ்கிறது. திருக்குர்ஆன் தனது அற்புதத்திற்கான ஆதாரமாக (2:24) இவ்வாறு கூறுகிறது:

فَأْتُوْا بِسُوْرَةٍ مِّنْ مِّثْلِهٖ

இந்த அற்புதம் ஆன்மீகமானதாகும். எவ்வாறு ஓரிறைமையின் ஆதாரத்தை அது தருகின்றதோ அவ்வாறே ஞானம், சொற்செறிவு மற்றும் பொருட்செறிவிற்கான ஆதாரத்தையும் அது தருகின்றது. மனிதன் இதைப் போன்ற ஒன்றை உருவாக்குவதற்கு ஆற்றல் பெற்றவன் அல்ல.

இன்னொரு இடத்தில் அவன் கூறுகின்றான்: (17:89)

لَئِنِ اجْتَمَعَتِ الْاِنْسُ وَ الْجِنُّ عَلٰٓى اَنْ يَّاْتُوْا بِمِثْلِ هٰذَا الْقُرْاٰنِ لَا يَاْتُوْنَ بِمِثْلِهٖ

## திருக்குர்ஆனின் சொற்செறிவு மற்றும் பொருட்செறிவு

ஆன்மீக அற்புதம் தொடர்பாக, இது முஸ்லிம்களின் கற்பனையாகும். மேலும் எண்ணமே ஆகும் என்று எவரும் கருத வேண்டாம். செய்யது அஹ்மதும் தடுமாற்றம் அடைந்து விட்டார். அவர் இதன் சொற்செறிவு மற்றும் பொருட்செறிவின் அற்புதத்தை ஏற்றுக் கொள்வதில்லை. செய்யது அஹ்மது அற்புதத்தை மறுத்து விட்டார் என்பதை நாம் நினைவு கூரும்போது நமக்கு வருத்தம் ஏற்படுகிறது. செய்யது சாஹிப் அவர்களால் எவ்விதத்திலும் அற்புதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் அவர் இவ்வாறு கூறுகின்றார்: அதாவது ஒரு சாதாரண அந்தஸ்தையுடைய மனிதரும் அல்லது உயர் அந்தஸ்தையுடைய மனிதரும் இதைப்போன்ற ஒன்றை உருவாக்க முடியும். ஆனால் வருத்தம் என்னவென்றால், திருக்குர்ஆனைக் கொண்டு வந்தவர் صُحُفًا مُّطَهَّرَةً فِيْهَا كُتُبٌ قَيِّمَةٌ என்ற அந்தஸ்தைக் கொண்டுள்ளார். அதாவது இது எத்தகைய வேதம் என்றால் இதில் நிலைத்து நிற்கும் கட்டளைகள் உள்ளன. (98:34)

## திருக்குர்ஆனின் முழுமைத்தன்மை

திருக்குர்ஆன் எத்தகைய ஞானம் நிறைந்த முழுமை பெற்ற வேதம் என்றால் அது எல்லாவற்றையும் சுயமே விளக்கக் கூடியதாக இருக்கின்றது. மேலும் அனைத்து விதத் தேவைகளுக்கான பொருட்களையும் தன்னுள் கொண்டுள்ளது. அது அனைத்து விதத்திலும் ஓர் அடையாளமாக இருக்கின்றது. எவர் ஒருவராவது இதனை மறுத்தால் பிறகு நாம் அனைத்து அம்சங்கள் மூலமாகவும் இதன் அற்புதத்தை நிரூபித்துக் காட்டுவதற்கும், வெளிப்படுத்திக் காட்டுவதற்கும் ஆயத்தமாக இருக்கின்றோம். இன்றைய நாட்களில் ஏகத்துவம், இறை இருப்பின் மீது மிகவும் வலுவான தாக்குதல் தொடுக்கப்படுகிறது. கிறித்தவர்களும் வலுவாக முயற்சி செய்தனர். மேலும் எழுதினார். அவர்கள் எதையெல்லாம் கூறினார்களோ, எழுதினார்களோ அவை அனைத்தும் இஸ்லாத்தின் இறைவன் தொடர்பாகவே எழுதினார்கள்.

நம்மால் வாதம் செய்து கூற முடியும். அதாவது எவர் அல்லாஹ்வின் இருப்பு தொடர்பாக எழுத பேனாவை எடுப்பாரோ அவர் இறுதியில் இஸ்லாம் எந்த இறைவனை முன் வைக்கின்றதோ அந்த இறைவன் பக்கமே வர வேண்டியது வரும். ஏனென்றால் தூய்மையான வேதங்களின் ஒவ்வொரு இடத்திலும் அவனது இருப்பு நமக்கு கிடைக்கின்றது. மேலும் நல்லியல்புள்ள மனிதன் அந்த இறைவனின் பிரதிபிம்பத்தையே தன்னுள் கொண்டுள்ளான். ஆக, அத்தகைய மனிதர்களின் காலடி உயரும்போது பிறகு அது இஸ்லாத்தின் பக்கமே அடியெடுத்து வைக்கும். இதுவும் ஒரு வியக்கத்தக்க அற்புதமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 69–71 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சடிக்கப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மாநாட்டின் நோக்கம்....இதுவாகும். அதாவது, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் மீதான அன்பை உள்ளத்தில் அதிகரிக்க வேண்டும்.**

**விருந்தினர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்யப்படுவது உரிமை என்றால் பிறகு விருந்தினர்களும் விருந்து உபசரிப்பவர்களின் உரிமையை வழங்க வேண்டும். மேலும் அவர்களுக்கு சுமையாக இருக்காதீர்கள்**

**U.K ஆண்டு மாநாடே தலைமையக மாநாடாகும். மேலும் இதில் கலந்து கொள்வதற்கு வெளியிலுள்ள மக்கள் அதிகமாக முயற்சி செய்கின்றனர். ஏனென்றால் கிலாஃபத்தின் தலைமையகம் இங்குதான் உள்ளது**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உதாரணத்தை எடுத்துக் கூறியவாறு விருந்து உபசரிப்பின் முக்கியத்துவம் தொடர்பாகவும், விருந்து உபசரிப்பவர்களும், விருந்தினர்களும் ஒருவர் மற்றவரது உரிமையை வழங்குவது தொடர்பாகவும், மாநாட்டின் நாட்களில் தொழுகையை ஜமாஅத்தாக தொழுவது, தஹஜ்ஜுத் தொழுகையை நிலைநாட்டுவது, சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்திருப்பது மற்றும் தமது நிலைமைகளைச் சிறப்பானதாக ஆக்குவது தொடர்பாகவும் எடுத்துக் கூறியவாறு முழு உலக அஹ்மதிகளுக்காகவும் மற்றும் மாநாட்டின் வெற்றிக்காகவும் துஆ செய்யுமாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள ஹதீகத்துல் மஹ்தி மாநாட்டுத் திடலில் 02 ஆகஸ்ட் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **02 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அல்லாஹ் நமக்கு இன்று மீண்டும் U.K ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றான். கடந்த மாதம் ஜெர்மனி ஜல்ஸா ஸாலானா நடைபெற்றது. உலகத்தின் மேற்கத்திய நாடுகளிலுள்ள பெரிய ஜமாஅத்துகளில் கனடாவின் ஜல்ஸா, ஜெர்மனி ஜல்ஸாவின் நாட்களிலேயே நடைபெற்றது. பிறகு கடந்த மாதம் அமெரிக்காவின் ஜல்ஸா ஸாலானா நடைபெற்றது. மேலும் உலகத்தில் மேலும் பல நாடுகளில் ஜல்ஸா நடைபெற்றது. மேலும் ஒவ்வொரு இடத்திலும் மிகவும் சிறப்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அல்லாஹ்வின் உதவி மற்றும் ஒத்துழைப்பின் வாக்குறுதிகள் நிறைவேறுவதைப் பார்க்கின்றோம்.

மேலும் U.K வின் ஜல்ஸா ஸாலானா தனக்கென்று ஒரு அந்தஸ்தை பெற்றுள்ளது. அதாவது உலகத்தின் பார்வை குறிப்பாக நம்மவர்கள் மற்றும் அந்நியர்களின் பார்வை இதன் பக்கம் இருக்கின்றது. மேலும் எல்லா வகையிலும் இந்த ஜல்ஸா உலகளாவிய ஜல்ஸா என்ற அந்தஸ்து பெற்றுள்ளது. இந்த ஜல்ஸா தற்போது U.K வின் ஜல்ஸா ஸாலானாவாக மட்டும் இருக்கவில்லை. நான் ஜெர்மனி ஜல்ஸா ஸாலானா தொடர்பாகவும், தற்போது ஜெர்மனி U.K ஜல்ஸா ஸாலானா உலகளாவிய ஜல்ஸா என்ற அந்தஸ்தைப் பெற்று விட்டது என்று கூறியிருந்தேன்.

பல நாடுகளின் பிரதிநிதித்துவம் அங்கிருந்தது. மேலும் ஜெர்மனி U.K ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையும் இங்கு கலந்து கொண்டவர்களை விட அதிகமாக இருக்கலாம். ஆனால் இருந்தபோதிலும் U.K ஜல்ஸா ஸாலானாதான் தலைமையக ஜல்ஸாவாகும். மேலும் U.K ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொள்வதற்கு மக்கள் அதிகமாக முயற்சி செய்கின்றனர். ஏனென்றால் கிலாஃபத்தின் தலைமையகம் இங்குள்ளது. ஆக இந்த அடிப்படையில் உலகத்தின் பல்வேறு நாடுகளிலுள்ள நம்மவர்களும் அந்நியர்களும் U.K ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொள்வதற்கு முயற்சி செய்கின்றனர். இந்த அடிப்படையில் ஜல்ஸாவின் பணியாளர்களின் பொறுப்பு மிகவும் அதிகமாகி விடுகின்றது. பிறகு இங்கு ஹதீக்கத்துல் மஹ்தியில் தற்காலிக நகரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடுகளும் குறிப்பான கவனத்தை எதிர்பார்க்கின்றது. ஆக இந்த அடிப்படையில் நான் பணியாளர்களுக்கு அவர்களின் டியூட்டி மற்றும் பொறுப்புகள் தொடர்பாக கவனமூட்டி வந்துள்ளேன். இப்போதும இது தொடர்பாக முதலில் எடுத்துக் கூறுவேன்.

அல்லாஹ்வின் அருளால் U.K ல் வசிக்கக்கூடிய அஹ்மதி முதியோர்கள், குழந்தைகள், பெண்கள் ஆகியோர் கடந்த 35 ஆண்டுகளாக அதாவது எப்போதிருந்து கிலாஃபத்தின் தலைமையகம் இங்கு வந்ததோ, காலத்தின் கலீஃபாவின் தலைமையில் ஜல்ஸாவின் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். மேலும் டியூட்டியை மனப்பூர்வமாக கொடுக்கின்றனர்.

ஆக U.K ஜல்ஸா ஸாலானாவின் வரலாறும் மிகவும் பழமை வாய்ந்ததாகும். ஆனால் அப்போது நடைபெற்ற ஜல்ஸா இப்போது இங்கு ஒரு ஹல்காவில் நடைபெறும் மாதாந்திர மீட்டிங்கில் கலந்து கொள்கின்றவர்களின் எண்ணிக்கையை விட குறைவாக இருக்கலாம். எனவே அஹ்மதிய்யா கிலஃபத்தின் தலைமையகமான U.K ஜல்ஸா ஸாலானா வரலாற்றின் கடந்த 35 ஆண்டு கால வரலாறைப் பற்றி நான் சான்றாக கூறினேன்.

எவ்வாறிருப்பினும் ஆரம்பத்தில் நடைபெற்ற ஜல்ஸாவில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் மிகவும் அதிகமான வழிகாட்டலை வழங்கி வந்தார்கள். அவர்களுக்கு இங்குள்ள ஏற்பாடுகள் தொடர்பாக அதிகமாக முயற்சிகள் செய்ய நேர்ந்தது. பாகிஸ்தானிலுள்ள சில பொறுப்பாளர்களின் உதவியையும் பெற நேரிட்டது. அவர்கள் இங்குள்ள அமைப்பாளர்களுடன் இணைந்து பணி செய்தனர். லங்கரின் ஏற்பாடு ஒரு மிகப்பெரிய ஏற்பாடாகும். இங்குள்ள வசதிவாய்ப்புகள் பாகிஸ்தானில் இருப்பதைப் போன்று இருக்கவில்லை. எவ்வாறு நாம் பணி செய்ய விரும்புகின்றோமோ அவ்வாறு இருக்கவில்லை.

எனவே நான்கு, ஐந்தாயிரம் நபர்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வது கூட அவர்களுக்கு இரண்டு, இரண்டரை லட்சம் நபர்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வது போன்று கடினமாக இருந்தது. ஹிஜ்ரத் செய்து கிலாஃபத் இங்கு வந்த பிறகு முதல்

முறையாக நான் 1988 ஆம் ஆண்டு ஜல்ஸாவில் கலந்து கொண்டேன். அப்போதைய ஏற்பாடுகளின் நிலையைப் பார்க்கும்போது ஐந்து, ஆறாயிரம் மக்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வது இவர்களுக்கு எந்த அளவுக்கு கஷ்டமாக இருந்தது என்பது தெரிய வருகின்றது.

எவ்வாறிருப்பினும் இன்று நாம் பார்க்கின்றோம். ஏற்பாடு ரீதியில் இங்குள்ள பணியாளர்கள் ரப்வாவின் பணியாளர்களுக்கு உதவி செய்வதற்கான தகுதியையும் பெற்றிருக்கின்றனர். கடந்த வாரம் ஜல்ஸா ஜாலானா ஏற்பாடுகள் தொடர்பான ஆய்வு பணியாளர்களுடன் நடைபெற்ற பிறகு உணவிற்கான ஏற்பாடும் இருந்தது. அதில் எனக்கு அருகில் ரப்வாவிலிருந்து வந்திருந்த நாஸிர் உமூரே கார்ஜா அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர் நாயிப் அஃப்ஸர் ஜல்ஸா ஸாலானவும் ஆவார்.

சாப்பிட்ட பிறகு அவர்கள் ரப்வாவிலிருந்து வந்திருந்த ஒரு பிரதிநிதியை அழைத்தார்கள். மேலும் சில விஷயங்களை பேசிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். நான் அவர்களிடம், என்ன பிரச்சனை என்று கேட்டேன். அதற்கு அவர்கள், நான் சாப்பிடுகின்ற இந்த லங்கரின் ரொட்டி மிகவும் நல்ல ரொட்டியாகும். மேலும் நாங்கள் ரப்வாவில் ரொட்டி தயாரிப்பதற்கு Trial செய்கின்றோம். அங்கும் அல்லாஹ்வின் அருளால் நிரந்தரமாக Trial நடைபெறுகின்றது. இயந்திரங்களை செயல்பாட்டில் வைக்க வேண்டும். மேலும் பணி செய்வதற்கான, டியூட்டி கொடுப்பதற்கான பழக்கமும் ஏற்பட வேண்டும் என்பதற்காக லங்கர் கானா தற்காலிகமாக ஒரு நாளுக்காக செயல்படும்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறினார்கள்: அங்கு எங்களது ரொட்டிகள் இந்த தரத்தில் இருப்பதில்லை. எனவே நான் அந்த பணியாளரிடம், இங்குள்ள ரொட்டி பிளாண்ட் நபர்களிடம் இந்த ரொட்டியின் தரத்தைப் பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அதாவது எவ்வாறு தயாரிக்கின்றனர்? மாவு மற்றும் தண்ணீரின் அளவு என்ன? அவர்களிடம் இதற்கான அளவைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறினேன்.

அல்லாஹ்வின் அருளால் தற்போது இங்கு பணி செய்யக் கூடியவர்கள் எந்த அளவுக்கு புலமை பெற்று விட்டார்கள் என்றால் அவர்களது ரொட்டி ரப்வாவின் அதிகாரிகளுக்கும் பிடித்தமானதாக ஆகிவிட்டது. இந்த முறை ரொட்டி பிளாண்ட்டில் பணி செய்யக்கூடிய இளைய இன்ஜினியர்ஸ் மிஷினில் lmprovements செய்துள்ளனர். அதிலிருந்து கோதுமையை வெளியே எடுப்பதில் எளிமை ஏற்பட்டுள்ளது. ரொட்டி பிளாண்ட்டில் பணி செய்யக்கூடிய இன்சார்ஜ் மற்றும் இன்ஜினியர்ஸ் இளைஞர்கள் ஆவர். வக்ஃபே நவ் ஆகவும் இருக்கின்றனர். அந்த குழுவிலுள்ள உறுப்பினர்கள், இதில் மேலும் அதிகமான முன்னேற்றத்தைக் கொண்டு வர வேண்டும். மேலும் மாவை கலப்பதிலிருந்து மிஷினிலிருந்து அதை தயாரிக்கும் மிஷின் வரை மாவு நேரடியாகச் செல்வதற்கான முயற்சியில் தற்போது செயல்பட்டு வருகின்றனர். ஆனால் இப்போது வாளி மூலமாகத்தான் மாவு கொண்டு செல்லப்படுகிறது. இத்தகைய வழிமுறையை முடிவுக்கு கொண்டு வர அவர்கள் முயற்சி செய்து வருகின்றனர்.

இதன் பொருள் இந்த Auto Machine காரணமாக பணியாளர்களைத் தொண்டு செய்வதிலிருந்து பாக்கியமற்றவர்களாக இருக்கச் செய்து விடுவோம் என்பது அதன் பொருள்ள. இந்த பணியாளர்கள் வேறு ஏதாவது சிறந்த தொண்டிற்காக நியமிக்கப்படுவார்கள். இன்ஷா அல்லாஹ். மேலும் இதுவே நமது ஜமாஅத்தின் தனிச்சிறப்பாகும். அதாவது குழந்தைப் பருவத்திலிருந்து பெரியவர் ஆகின்ற வரை நமது உறுப்பினர்கள் மனப்பூர்வமாக ஒவ்வொரு பணியிலும் தமது சிறந்த தகுதியுடன் பணி செய்வதற்கு முயற்சி செய்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் நான் இதைக் கூறியதன் நோக்கம், நான்கு ஐந்து ஆயிரம் நபர்களுக்கு உணவிற்கான ஏற்பாடுகளைச் செய்வது ஏற்பாட்டாளர்களுக்கு எத்தகைய சவாலான நேரமாக இருந்தது? மேலும் 90 சதவிகித் ரொட்டி கடை வீதிகளிலிருந்து வாங்கப்பட்டது. அந்த ரொட்டி சிறிது நேரத்தில் கெட்டும் விடும். பிறகு Second Hand ல் ஒரு சிறிய ரொட்டி பிளாண்ட் வாங்கப்பட்டது. அதுவும் கொஞ்ச நேரத்திலேயே பழுதாகி விடும். அதற்கென்று ஒரு நிரந்தர இன்ஜினியர் அமர்ந்திருப்பார். அதில் நமது பழைய இன்ஜியர்ஸ்களும் அதிக அளவில் பணி செய்து வந்துள்ளனர். அந்த பிளாண்ட்டும் கூட சில ஆயிரம் ரொட்டிகளை மட்டுமே தயார் செய்யும்.

ஆனால் இப்போது அல்லாஹ்வின் அருளால் 35, 40 ஆயிரம் நபர்களுக்கு ரொட்டி இது சுயமே தயாரிக்கின்றது. லட்சக்கணக்கில் ரொட்டி தயார் செய்யப்படுகின்றது. மேலும் அதனை நான் செக் செய்தும் பார்த்தேன். மக்களுக்கும் அதிக விருப்பத்திற்குரியதாக இருக்கிறது. அவ்வப்போது நான் இந்த ரொட்டியை விரும்பவும் செய்கின்றேன். ஆரம்பத்தில் இருந்த ரொட்டியை விட இந்த ரொட்டி மிகவும் நல்ல முறையில் தயார் செய்யப்படுகின்றது.

அல்லாஹ் பணி செய்கின்ற இந்த இளைஞர்களின் திறமைகளை மேலும் அதிகப்படுத்துவானாக. மேலும் அவர்களுக்கு அறிவையும் வழங்குவானாக. மேலும் இவர்கள் ஜல்ஸாவின் விருந்தாளிகளுக்கு முன்பை விட அதிகமாகத் தொண்டாற்றக்கூடியவர்களாக இருப்பார்களாக.

அதே போன்று லங்கர் கானாவில் உணவு சமைப்பதற்கான குழுக்கள் இருக்கின்றன. அவர்கள் தத்தமது இன்சார்ஜ் சாஹிபான்களுடன் மிகவும் முயற்சி செய்தவாறு பணி செய்கின்றனர். உணவின் தரமும் மிகவும் நல்லதாக இருக்கின்றது. அல்லாஹ் இந்த மூன்று நாட்களிலும் சிறப்பாக ஆக்கி வைப்பானாக.

பிறகு லங்கர் கானாவில் பாத்திரங்களைக் கழுவக்கூடிய துறை இருக்கின்றது. இதுவும் மிகப்பெரிய பணியாகும். இவர்களுக்கு சில வருடங்களுக்கு முன்பு இந்த பாத்திரங்களைக் கழுவுவதற்காக நமது அஹ்மதி இன்ஜினியர்ஸ் உருவாக்கிய மிஷின் வாங்கிக் கொடுக்கப்பட்டது. ஜெர்மனி மக்கள் இதனை அதிகமாக விரும்புகின்றனர். மேலும் மிகவும் வேகமாக இந்த மிஷின் அண்டாவைக் கழுவி வெளியில் எடுத்து விடும் என்று அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். இங்கு நமது இந்த துறையானது இரண்டு மூன்று வருடங்கள் வரை இந்த மிஷினைப் பயன்படுத்தியது. இத்துடன் கைகளாலும் பாத்திரங்களைக் கழுவினர். இந்த மிஷினை கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்று நான் கூறியதனால் இவர்கள் அவ்வாறு செய்தனர். இந்தப் பணி இவ்வாறு நடைபெற்றது.

ஆனால் கடந்த ஆண்டிலிருந்து இவர்கள், எங்களை கைகளாலேயே கழுவ விடுங்கள். நாங்கள் குறைந்த நேரத்தில் இந்த பாத்திரங்களைக் கழுவி விடுவோம். மாறாக, இதற்காக ஆகுகின்ற நேரத்தில் மூன்றில் ஒரு பகுதியில் அதாவது எவ்வளவு நேரத்தில் இந்த மிஷின் ஒரு பாத்திரத்தைக் கழுவுகின்றதோ அதற்குள் நாங்கள் மூன்று பாத்திரங்களைக் கழுவி விடுவோம். மேலும் கழுவுவதும் கூட மிஷினை விட அதிக தூய்மையாகவும் சிறந்ததாகவும் இருக்கும் என்று கூற ஆரம்பித்து விட்டனர்.

நான் அவர்களது இன்சார்ஜிடம் நகைச்சுவையாக, நீங்கள் இந்த துறையில் ஏதோ ஜின்னை வைத்துள்ளீர்கள் என்று கூறினேன். ஏனென்றால் ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள் இப்போது வரை இவ்வளவு குறைவான நேரத்தில் எவராவது பாத்திரங்களைக் கழுவ முடியுமா? என்பதை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இல்லை. எவ்வாறிருப்பினும் இந்த துறையில் இம்மக்கள் மிகவும் முயற்சி செய்து பணி செய்கின்றனர். முயற்சி மட்டுமல்ல. மாறாக, நேரத்தை

செலவு செய்கின்றனர். இதுவும் கடினமான பணியாகும். பாகிஸ்தான் மற்றும் காதியானில் இந்த பணி வேலையாட்களுக்கு கூலி கொடுத்து செய்யப்படுகிறது. ஆனால் இங்கு மிகவும் கலப்பற்ற தன்மையோடும், உணர்வோடும் பணியார்கள் இந்தப் பணியை செய்கின்றனர்.

பிறகு உணவு பரிமாறுவதற்கான துறை இருக்கிறது. இதிலும் இவர்கள் முன்னேற்றத்திற்கான முயற்சியை செய்துள்ளனர். விருந்தினர்கள் குறைவான நேரத்தில் நிம்மதியகாக உணவு சாப்பிட்டு விட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காக கூடாரத்தை விரிவுபடுத்தியுள்ளனர்.

இதே போன்று மற்ற துறைகளும் உள்ளன. தூய்மை தொடர்பான துறை உள்ளது. பார்க்கிங் துறை, டிராஃபிக் துறை, மாநாட்டுத் திடலில் பல்வேறு துறைகள் உள்ளன. பாதுகாப்புத்துறை மிகவும் முக்கியமான ஒரு துறையாகும். இதே போன்று மேலும் பல துறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு துறையும் தத்தமது வட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த அனைத்துத் துறைகளிலும் ஆயிரக்கணக்கான பணியாளர்களுக்கு பணி செய்யக்கூடிய நற்பாக்கியம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதே போன்று பெண் பணியாளர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கும் பணி செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் சிறந்த முறையில் பணி செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இந்தப் பணியாளர்களிடம் எப்போதும் நான் கூறி வருகின்றேன். அதாவது உங்களது பணி, எந்த உணர்வுடனும், ஆர்வத்துடனும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக உங்களை அர்ப்பணித்துள்ளீர்களோ அந்த உணர்வை இறுதி நேரம் வரை நிலைத்திருக்கச் செய்யுங்கள். ஜல்ஸாவிற்குப் பிறகும் Wind Up பணி நடைபெறும். அது ஏறக்குறைய ஒரு வாரம் வரை செய்ய வேண்டியது வருகிறது.

எனவே ஜல்ஸாவின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக பல்வேறு இடங்களில் பணி செய்கின்ற பணியாளர்களும், பணிப் பெண்களும் இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது நீங்கள் சிரித்த முகத்துடன் விருந்தினர்களுடன் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யும் பட்சத்தில் உங்களுக்கு இந்த ஜல்ஸாவின் இரண்டு மடங்கு கூலியைப் பெறக் கூடியவர்களாக இருப்பீர்கள். மேலும் அருட்களைப் பெறக் கூடியவர்களாக இருப்பீர்கள். ஒன்று ஜஸ்லாவில் கலந்து கொண்டு அதன் அருட்களை பெறுபவர்களாகவும், மற்றொன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்து அதன் அருட்களைப் பெறுபவர்களாகவும் இருப்பீர்கள்.

விருந்து உபசரிப்பு அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரியதாகும். எந்த அளவுக்கு அல்லாஹ்வுக்கு விருப்பமானதென்றால் இதைப் பற்றி ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தொடர்பாக திருக்குர்ஆனில் இரண்டு முறை அல்லாஹ் கூறியுள்ளான். விருந்தாளிக்கு உணவு கொடுப்பது சாதாரண விஷயம் என்றால் பிறகு விருந்தாளிகள் வரும்போது ஒவ்வொரு முறையும் அவர்களுக்கு உணவு கொடுப்பது தொடர்பாகவும் கூறப்பட்டிருக்காது. அல்லாஹ் கூறுகின்றான்:

فَمَا لَبِثَ أَنْ جَاءَ بِعِجْلٍ حَنِيذٍ

அதாவது பொறித்த அந்த காளைக்கன்றை மிகவும் விரைவாக எடுத்து வந்தார்கள்.

அந்தக் காலத்தில் எந்த உபசரிப்பை அவர்கள் செய்ய முடியுமோ அதை அவர்கள் செய்தார்கள். தமது விலங்கை அறுத்து அதை அவர்களுக்கு முன்னால் அர்ப்பணிப்பதும் மிகப்பெரிய உபசரிப்பாகும். மேலும் அதனையே அங்கு உடனடியாக ஏற்பாடு செய்ய முடியும். மேலும் அது அந்த நேரத்தில் வழிமுறையாகவும் இருந்தது. மிக உயர்தரத்தை அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

மேலும் இன்றைய காலத்திற்கேற்ப எத்தகைய விருந்து உபசரிப்பைச் செய்ய முடியுமோ அதை நாம் செய்ய வேண்டும். விருந்தினர்களை உபசரிப்பது என்பது, கண்டிப்பாக முயற்சி செய்ய வேண்டும் என்றோ, முயற்சி செய்து ஆட்டைத் தேட வேண்டும் என்றோ கிடையாது; மாறாக, எது எளிதாகவும் விரைவாகவும் கிடைக்குமோ அதைக் கொண்டு செய்ய வேண்டும். எது எளிதாகவும் விரைவாகவும் கிடைக்க முடியுமோ, மேலும் உயர்தரமான விருந்து உபசரிப்பையும் நாம் செய்ய வேண்டும்.

இது தொடர்பான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகிய நடைமுறை நம்முன் இருக்கிறது. பேரீத்தம் பழம் இருந்தால் அதை அவர்கள் வழங்கி விடுவார்கள். மாமிசம் இருந்தால் அல்லது சிறந்த உணவு இருந்தால் அதை அவர்கள் வழங்கி விடுவார்கள். மேலும் ஆட்டின் பால் இருந்தால் அதை அவர்கள் வழங்கி விடுவார்கள். மேலும் தம்மிடத்தில் எதுவும் இல்லையென்றால் பிறகு சஹாபாக்களிடம், இந்த விருந்தாளியை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள். அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்யுங்கள் என்று கூறுவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொண்டுள்ள எந்த மூன்று விஷயங்களைப் பற்றி கூறியுள்ளார்களோ அவை அனைத்தும் ஒன்று மற்றொன்றின் உரிமையுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. சமூகத்தில் அமைதியை நிலைநாட்டுவதுடன் தொடர்புடையதாக இருக்கின்றது.

முதல் விஷயம் என்னவென்றால், நல்ல விஷயத்தைப் பேசுங்கள். அல்லது அமைதியாக இருங்கள். அநாவசியமான பேச்சுக்களைப் பேசி நிம்மதியற்ற சூழலை உருவாக்காதீர்கள். ஒருவர் மற்றொருவருக்கு எதிராக காழ்ப்புணர்ச்சி ஏற்படுத்தாதீர்கள். ஒரு நம்பிக்கையாளர் வீணான மற்றும் தேவையில்லாத விஷயங்களைப் பேச மாட்டார்.

இரண்டாவதாக, தமது அண்டை அயலாருக்குக் கண்ணியமளியுங்கள். அவருக்கு செலுத்த வேண்டிய உரிமை என்னவென்றால், அவருக்கு கண்ணியமளிக்க வேண்டும். அவரைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதாகும்.

இங்கு இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்ள வந்துள்ள அனைவரும் ஒருவர் மற்றவரது அண்டை அயலார் ஆவர். வந்திருக்கின்ற விருந்தாளிகளும், விருந்தாளிக்காக பணி செய்யக்கூடிய பணியாளர்களும் அண்டை அயலாலர் ஆவர். எனவே இந்த அடிப்படையில் விருந்தினர்களும் பணி செய்யக் கூடியவர்களுக்கு கண்ணியமும் மரியாதையும் வழங்க வேண்டும். மேலும் பணியாளர்களும் விருந்தாளிகளுடன் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும். பிறகு ஒருவர் மற்றவரை சந்திக்கும்போது கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடக்க வேண்டும்.

மூன்றாவதாக, தமது விருந்தினர்களுக்குக் கண்ணியம் வழங்குங்கள் என்று அன்னார் கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான்... ஹதீஸ் எண் 47)

இது குறிப்பாக விருந்து உபசரிப்பு செய்வர்களுக்குரியதாகும். ஒரு அழகான, அமைதி நிறைந்த சமூகத்தை உருவாக்குவதற்கு இது

அடிப்படையானதாகும். அல்லாஹ்வின் கட்டளைகளில் இதுவொரு கட்டளையாகும். மேலும் இது ஒரு நம்பிக்கையாளரின் அடையாளமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அதிகமான விருந்தினர்கள் வருகை தந்தபோது சஹாபாக்கள் மத்தியில் அன்னார் பங்கிட்டுக் கொடுப்பார்கள். பிறகு விருந்தாளிகளிடம், உங்களது சகோதரர் உங்களுக்கு விருந்து உபசரிப்பு சிறந்த முறையில் செய்தாரா? என்றும் கேட்பார்கள். சஹாபாக்களும் பெருமானார் (ஸல்) அவர்களின் நெருக்கத்தையும் பெற்றிருந்தார்கள். அன்னாரின் தர்பிய்யத்தையும் பெற்றிருந்தார்கள். அன்னாரிடமிருந்து அருளைப் பெறக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் எத்தகைய விருந்து உபசரிப்பைச் செய்தார்கள் என்றால், எங்களுக்கு விருந்து உபசரிப்பு செய்தவர்கள் தம்மை விட எங்களையே நல்ல விதமாகக் கவனித்தனர்; மேலும் சிறந்த உணவை வழங்கினார்கள் என்று விருந்தினர்கள் பதிலளித்தனர்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 357 ஹதீஸ் எண் 15644 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களின் விருந்து உபசரிப்பின் நடைமுறை இவ்வாறேயாகும். அந்த விருந்தினர்கள் மார்க்கத்தைப் புரிந்து கொள்வதற்கும், மார்க்க அறிவைப் பெறுவதற்காகவும்தான் வந்தார்கள். இங்கு வந்துள்ளவர்களும் இந்த நோக்கத்திற்காகவே வருகின்றனர். மேலும் இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அழைத்ததனால் அல்லாஹ்விற்காகவே இந்த மார்க்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்துள்ளனர்.

எனவே நாம் அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளோம். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் வசதி வாய்ப்புகள் முன்பை விட அதிகமாக ஆகிவிட்டன. மேலும் ஜமாஅத்தின் அமைப்பின்கீழ் விருந்து உபசரிப்பு செய்யப்படுகின்றது. மாறாக, சில வீடுகளில் தங்கியுள்ள விருந்தினர்களுக்கும் கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் லங்கர் கானாவிலிருந்து உணவை எடுத்துச் செல்ல வீட்டிலுள்ளவர்களுக்கு அனுமதி உள்ளது. தமது விருந்தாளிகளுக்கு அவர்கள் எடுத்துச் செல்ல விரும்பினால் எடுத்துச் செல்லலாம். ஆனால் சஹாபாக்களின் நிலை இவ்வாறு இருக்கவில்லை.

அதாவது அவர்களுக்குத் தலைமையக ஏற்பாடும் இருக்கவில்லை. அவர்களில் பெரும்பான்மையானவர்களின் தனிப்பட்ட நிலையும் சிறந்ததாக இருக்கவில்லை. மாறாக, எத்தகைய சம்பவங்கள் கிடைக்கின்றன என்றால், அவர்கள் தமது குழந்தைகளைப் பட்டினியாகத் தூங்கச் செய்தனர். கணவனும், மனைவியும் பட்டினியாக தூங்கினர். ஆனால் விருந்தினர்களுக்கு அவர்களிடம் இருந்த உணவைக் கொண்டு பரிமாறினர். அவர்களது இந்த செயலினால் அல்லாஹ் மகிழ்ச்சியடைந்தான். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் அறிவித்துக் கொடுத்தான்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மனாகிபுல் அன்ஸார்... ஹதீஸ் எண் 3798)

ஆக அந்த நபரின் அழகிய முன்மாதிரியைக் கடைபிடிக்கும்படி நமக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. அவர்கள் தியாகம் செய்து விருந்து உபசரிப்பு செய்து வந்தனர். மேலும் இன்று அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் அதிகமான மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் தியாகம் செய்ய வேண்டும் என்ற உணர்வில் விருந்து உபசரிப்பு செய்கின்றனர். மேலும் இதனையே நாமும் செய்ய வேண்டும். ஜமாஅத் ஏற்பாடுகள் இருந்தபோதிலும் சிலர் சுயமே விருந்து உபசரிப்பு செய்ய விரும்புகின்றனர்.

பிறகு டியூட்டியில் இருக்கின்ற பணியாளர்கள் அவர்கள் எந்தத் தொண்டை செய்பவர்களாக இருப்பினும் அவர்களில் ஒரு சிலர் அல்ல மாறாக நூறு சதவிகிதம் நபர்களும் தியாக உணர்வுடன் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு விருந்து உபசரிப்பு செய்ய வேண்டும். நான் கூறியதுபோன்று, தற்போது பட்டினியாக இருப்பதற்கான தியாகம் நம்மிடம் கேட்கப்படவில்லை. மாறாக, தற்போது பணியாளர்களிடம் கேட்கப்படுகின்ற தியாகம் நேரத்தின் தியாகமாகும். ஆனால் அத்துடன் உணர்வின் தியாகமும் கேட்கப்படுகின்றது.

சில நேரங்களில் சில விருந்தினர்கள் விரும்பத்தகாத செயல்களை வெளிப்படுத்துகின்றனர். இத்தகைய நிலைமையில் உணர்வுகளைத் தியாகம் செய்ய வேண்டியது வருகிறது. பொறுமையை மேற்கொள்ள வேண்டியது வருகிறது. அமைதி காக்க வேண்டியது வருகிறது. ஏன் அமைதி காக்க வேண்டியது வருகின்றது என்றால், நமக்கு விருந்தினர்களின் மீது நல்லெண்ணம் இருக்கின்றது. அதாவது இம்மக்கள் நல்ல எண்ணத்துடன் மார்க்க மற்றும் ஆன்மீக தாகத்தைத் தீர்ப்பதற்காக வந்துள்ளனர். ஏதோ தவறான எண்ணத்தின் காரணமாக அவர்கள் இத்தகைய செயலை வெளிப்படுத்தி இருக்கலாம்.

எனவே நம்மிடம் தவறு இல்லையென்றாலும் நாம் மன்னித்து அவர்களது பணியை செய்வோம். மேலும் இத்தகைய மிக உயர்ந்த நல்லொழுக்கத்தை நாம் இந்தக் காலத்தில் விருந்தினர்களுக்காக வெளிப்படுத்த வேண்டும். இதையே இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கின்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இத்தகைய பல சம்பவங்கள் இருக்கின்றன. அதன் மூலம் அன்னார் விருந்தினர்களைக் கண்ணியப்படுத்தியது மற்றும் விருந்து உபசரிப்பின் உயர் தரத்தை நிலைநாட்டியது தெரிய வருகிறது.

ஒரு முறை தொலை தூரப் பகுதியிலிருந்து வந்திருந்தவர்கள் லங்கர் கானாவின் பணியாளர்கள் அவர்களது பொருட்களை குதிரை வண்டியிலிருந்து இறக்க மாட்டோம் என்று கூறியதால் கோபமடைந்து திரும்பிச் சென்று விட்டனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இது பற்றித்

### திருக்குர்ஆனிலிருந்து...

தூதரே! என்னடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கின்றேன். பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்றபோது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக). (2:187)

A.Nasir Ahmad
அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

### திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் பாதையிலே (பொருளையும் உயிரையும்) செலவு செய்யுங்கள். நீங்கள் உங்கள் கைகளாலேயே (உங்களை) அழிவிற்காளாக்கிக் கொள்ளாதீர்கள். நன்மை செய்யுங்கள். அல்லாஹ் நிச்சயமாக நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். (2:196)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

தெரிய வந்தது. கூறப்படுவது என்னவென்றால், அன்னார் காலணிகளை அணிவது கூட கடினமான சூழலாக இருந்தது. அதாவது ஏதோவொரு இக்கட்டான சூழ்நிலை உருவாகி விட்டது போன்று அன்னார் வேகமாக அவர்களுக்குப் பின்னால் நடந்தே சென்றார்கள். அந்த மக்கள் குதிரை வண்டியில் சென்று கொண்டிருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் அந்த மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருவதைக் கண்டு தமது குதிரை வண்டியை நிறுத்தினார்கள். குதிரை வண்டியிலிருந்து இறங்கினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களிடம் மன்னிப்பு வேண்டினார்கள். மேலும் திரும்பி வருமாறு கூறினார்கள். அவர்களது குதிரை வண்டி திரும்பி வந்தபோது, அன்னார் அவர்களிடம் நீங்கள் அமர்ந்து வாருங்கள். நான் உங்களுடன் நடந்து வருகின்றேன் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் விருந்தினர்கள் வெட்கமடைந்தனர். அவர்கள் குதிரை வண்டியில் அமரவில்லை. மாறாக, நடந்தே வந்தனர். இறுதியில் அம்மக்கள் லங்கர் கானா திரும்பி வந்ததும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே அந்த மக்களின் பொருட்களை இறக்க ஆரம்பித்தார்கள். இதற்காகத் தமது கையை உயர்த்தினார்கள். குத்தாம்கள் ஏற்கனவே வெட்கப்பட்டிருந்தனர். எனவே அவர்கள் உடனடியாக முன் வந்து விருந்தினர்களின் பொருட்களை இறக்கினர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களுக்குரிய தங்குமிடம், உணவிற்கான ஏற்பாடு போன்றவை அவர்களுக்குத் திருப்திகரமாக இருக்கின்ற வரையில் அங்கு இருந்தார்கள்.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 2 பக்கம் 56,57 அறிவிப்பு எண் 1069)

அன்னார் தமது பணியாளர்களிடம், பாருங்கள் அதிகமான விருந்தினர்கள் வருகின்றனர். இவர்களில் சிலரை நீங்கள் அறிவீர்கள். சிலரை அறிய மாட்டீர்கள். எனவே அனைவரும் கண்ணியத்திற்குரியவர்கள் என்று கருதி அவர்களுக்கு உபசரிப்பு செய்யுங்கள். அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள்.

அன்னார் கூறினார்கள்: நீங்கள் விருந்தினர்களுக்கு நிம்மதிக்கான ஏற்பாட்டைச் செய்வீர்கள் என்று உங்கள் மீது எனக்கு நல்லெண்ணம் இருக்கின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 226)

ஆக இந்த நல்லெண்ணத்தை இன்றும் நாம் நிலைநாட்ட வேண்டும். இதற்குப் பிறகு நான் விருந்தினர்களுக்கு சிலவற்றைக் கூற விரும்புகின்றேன். முதலில் நான் ஒருவர் மற்றவரது உணர்வுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறினேன். இது அனைவரது கடமையாகும். அதாவது விருந்தினர்கள் மற்றும் விருந்து உபசரிப்பு செய்பவர்களின் கடமையாகும். இஸ்லாம் விருந்தினர்களின் கண்ணியம் தொடர்பாகக் கட்டளையிடும் அதேவேளையில், விருந்தினர்களிடம் நீங்கள் விருந்து உபசரிப்பு செய்பவர்களுக்கு அதிக சுமையாக இருக்காதீர்கள் என்றும் கட்டளையிட்டுள்ளது.

## திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக! மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக என்று அவர்களுள் சிலர் வேண்டுகின்றனர். (2:202)

M.Sabahul Islam & Mohaideen Ali
(Melapalayam)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அதிகமான நாட்கள் எவரது வீட்டிலாவது விருந்தாளியாகத் தங்குவது, வீட்டிலுள்ளவர்களுக்கு சுமையாக ஆகுவது நீங்கள் சதகாவைப் பெறுவதைப் போன்றதாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் அதப்.... ஹதீஸ் எண் 6135)

ஆரம்பத்திலிருந்து இறுதி வரை ஒரே வகையில் விருந்து உபசரிப்பு செய்வது ஒவ்வொருவரது நிலையாக இருப்பதில்லை. எனவே விருந்தாளிகளிடமும், நீங்களும் வீட்டிலுள்ளவர்களை கருத்தில் கொள்ளுங்கள் என்றே கட்டளையிடப்பட்டுள்ளது. அதிகமான நாட்கள் தங்க வேண்டுமென்றால் பிறகு வீட்டிலுள்ளவர்கள் இருப்பதைப் போன்று நீங்கள் இருக்க வேண்டும். வீட்டிலுள்ளவர்களுக்கு ஏதாவது உதவிக்கான தேவை இருக்குமென்றால் பிறகு அதையும் செய்ய வேண்டும். இந்த நாடுகளில் குறிப்பாக மக்கள் செய்கின்றனர். இதுவே ஒரு அழகிய சமூகத்தை உருவாக்குவதற்கு அவசியமாகும்.

நாம் மற்றவர்களுக்கு சுமையாக இருக்கின்றோம் என்ற உணர்வு உருவாகி விட்டால் பிறகு அங்கு கலப்பற்ற தன்மை மற்றும் அன்பில் குறை ஏற்பட்டு விடுகிறது. இந்தக் குறை ஏற்படுமானால் பிறகு நிலைமையும் நிம்மதிகரமானதாக இருப்பதில்லை. எனவே விருந்தாளிகள் இதை நினைவில் கொள்ள வேண்டும். மேலும் தமது கடமையை நிறைவேற்றுவது அவர்களது கடமையாகும்.

மேலும் விருந்து உபசரிப்பு செய்வது விருந்தாளிக்கு உரிமையாக இருப்பதுபோன்று அவரும் மற்றவரது உரிமையை செலுத்த வேண்டும். அதாவது அவர் மற்றவர்களுக்கு சுமையாக இருக்கக் கூடாது. விருந்தினர்களின் இந்த உரிமையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில நாட்களுக்காகவே குறிப்பிட்டுள்ளார்கள்.

ஏற்பாட்டாளர்களுக்கு நான் இதனையும் கூறி விடுகின்றேன். அதாவது நமது ஜல்ஸாவிற்கு வந்துள்ள விருந்தாளிகள் ஒரு மாதம் தங்கினாலும் அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்ய வேண்டும். நாம் மூன்று நான்கு நாட்களுக்குப் பிறகு விருந்து உபசரிப்பை முடித்து விடலாம் என்று கருதக்கூடாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது பணிகள் தொடர்பாக லங்கர் கானா நிறுவப்படுவதையும் கூறியுள்ளார்கள்.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 221)

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் லங்கருக்கு வருபவர்களிடம், எப்போது அவர்கள் வந்தாலும் அது ஜல்ஸாவின் நாட்களாக இருந்தாலும், பொதுவான நாட்களாக இருந்தாலும் சரி சிறந்த நல்லொழுக்கத்தை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். பிறகு குறிப்பாக சலாத்தை பரப்புவதை விருந்தாளிகள் இந்த ஜல்ஸாவின் சூழலில் அமல் செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுவர்க்கத்திற்கு செல்லக்கூடியவர்களின் ஒரு சிறப்பம்சமாக அவர்கள் சலாத்தை பரப்பக் கூடியவர்களாக இருப்பார்கள் என்றும் கூறியுள்ளார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான்.... ஹதீஸ் எண் 54)

அன்னார் கூறினார்கள்: நீங்கள் எவரை அறிவீர்களோ அல்லது அறிய மாட்டீர்களோ அவருக்கு நீங்கள் சலாம் கூறுங்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஈமான்... ஹதீஸ் எண் 28)

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஜல்ஸாவின் நோக்கங்களில் ஒரு நோக்கமாக இதையும் கூறினார்கள். அதாவது மக்கள் ஒன்று கூட வேண்டும். இவ்வாறு ஒன்று கூடுவதனால் ஒருவர் மற்றவருக்கிடையே அன்பின் தொடர்பு, மற்றும் அறிமுகம் அதிகமாகும்.

(ஆஸ்மானீ ஃபேஸிலா, ரூஹானீ கஸாயின் தொகுதி 4 பக்கம் 352)

எனவே சலாம் இந்த அன்பு மற்றும் அறிமுகத்தின் வழியை அதிகப்படுத்துவதற்குரிய மிகச்சிறந்த வழிமுறையாகும். சகோதரத்துவம் மற்றும் அறிமுகத் தொடர்பை அதிகப்படுத்துவதற்கான மிகச்சிறந்த வழியாகும். இதன் ஒரு பயன் என்னவென்றால், எவர்களுக்கிடையில் பகைமை இருக்கின்றோ அது எந்த காரணத்தினால் இருந்தாலும் சரி அது நீங்கும். பிறகு இங்கு வந்துள்ள மக்கள் அல்லாஹ்விற்காக வந்துள்ளனர்.

மேலும் அவர்கள் நாம் இறைவனுக்காகவும், மார்க்க அறிவு மற்றும் ஆன்மீகத் தாகத்தைத் தீர்ப்பதற்காக இங்கு வந்துள்ளோம் என்ற எண்ணத்தில் இங்கு வர வேண்டும். மேலும் நான் கூறியதுபோன்று ஒவ்வொருவரும் தொடர்பையும் சிறந்ததாக ஆக்கிக் கொள்ள வேண்டும். பகைமை மற்றும் வெறுப்பை நீக்குவதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஜல்ஸாவிற்கு வந்து, உலகத்தின் மீதான அன்பு குளிர்ந்து விட வேண்டும். மேலும் இறைவன் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அன்பும் உள்ளத்தில் மிகைத்து விட வேண்டும் என்ற இந்த நோக்கத்தை முழுமை செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

(ஆஸ்மானீ ஃபேஸிலா, ரூஹானீ கஸாயின் தொகுதி 4 பக்கம் 351)

ஆக இந்த அன்பைப் பெறுவதற்காக ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளில் நாம் குறிப்பாக பங்கு பெற வேண்டும். பிறகு அதைக் கேட்டு சிந்திக்க வேண்டும். ஜல்ஸாவின் போதும், நடக்கும் போதும் இறைவனை அதிகமாக நினைவு கூற வேண்டும். ஜமாஅத்தான தொழுகையைக் குறிப்பான கவலையுடனும், கவனத்துடனும் செலுத்த வேண்டும். மற்றும் நவாஃபில் மற்றும் தஹஜ்ஜுத் தொழுகை தொழுவதன் பக்கமும் குறிப்பாக கவனம் செலுத்துங்கள்.

குறிப்பாக இங்கு தங்கியிருப்பவர்கள் இந்தச் சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்திருக்க முயற்சி செய்யுங்கள். உங்கள் நிலைமைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் காலை முதல் மாலை வரை வருகின்ற அனைவரது கடமை என்னவென்றால், அவர்கள் ஜல்ஸாவின் நோக்கத்தை நோக்கத்தை நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் இறைவனது நெருக்கத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும். அவனது ரஸூல் (ஸல்) அவர்களின் மீதான அன்பை உள்ளத்தில் அதிகரிக்க வேண்டும்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் ஒப்படைத்துள்ள இந்தப் பணி மிகப்பெரிய பணியாகும். அதாவது அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீதான அன்பு நமது உள்ளத்தில் மிகைத்திருக்க வேண்டும். ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் இந்த நோக்கத்தை முன்நிறுத்தி இதை அடைவதற்கு முழுமையாக முயற்சி செய்வார்கள் என்றால் பிறகு நீங்கள் தமது நோக்கத்தை அடைந்து விட்டீர்கள்; ஜல்ஸாவிற்கு வந்த நோக்கத்தை நிறைவேற்றி விட்டீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

பிறகு தங்குமிடமும், உணவும் சாதாரண ஒரு விஷயமாக ஆகிவிடும். உண்மையான குறிக்கோள், நாம் நமது ஆன்மீக நிலையைச் சிறந்ததாக ஆக்க வேண்டும். மேலும் அதில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இது நமக்குக் கிடைத்து விட்டால் பிறகு நான் கூறியது போன்று ஜல்ஸாவின் கலந்து கொண்டதன் நோக்கத்தையும் நீங்கள் பெற்று விட்டீர்கள்.

இவ்வாறே ஏற்பாடு ரீதியாக விருந்தினர்கள் இதையும் கருத்தில் கொள்ளவும். அதாவது தற்காலிக மற்றும் பரந்த ஏற்பாடுகளில் சில குறைகளும் இருந்து விடுகிறது. எங்கேயாவது ஏதாவதொரு இத்தகைய நிலை தென்பட்டால் பொறுத்துக் கொள்ளுங்கள். பணியாளர்களிடம், எவராவது கடினத்தை வெளிப்படுத்தினால் நீங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று நான் கூறியுள்ளேன்.

ஆனால் விருந்தினர்கள், கலந்து கொள்ளக் கூடியவர்களின் பணியும் என்னவென்றால், குறைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். இத்தகைய குறைகளைப் பார்க்கும்போது பணியாளர்களுக்கு உதவுங்கள். தேவைப்பட்டால் சில விருந்தினர்கள் மிகுந்த ஆர்வத்துடன் அவர்களே விருந்து உபசரிப்பு செய்பவர்களாக மாறி பணி செய்வதை நான் பார்த்துள்ளேன்.

உதாரணமாக, பாத்ரூம் சுத்தப்படுத்தும் பணி உள்ளது. அதிகமாக கூட்டம் இருக்குமென்றால், டியூட்டியில் இருக்கின்ற பணியாளர்கள் முழுமையாக சுத்தப்படுத்தும் பணியை செய்ய முடியவில்லை என்றால் பிறகு சில விருந்தினர்கள் டியூட்டி கொடுக்கின்றவர்களுடன் இணைந்து பணி செய்கின்றனர். இந்த உணர்வே ஓர் அஹ்மதியிடம் இருக்க வேண்டும். மேலும் இதுவே ஒரு உண்மையான ஆன்மா ஆகும். இதுவே கலப்பற்ற சமூகத்தை நிலைபெறச் செய்யும். விருந்தினர்கள் பணியாளர்களை சோதித்துப் பார்ப்பதில் மட்டும் தமது நேரத்தை செலவழிக்க வேண்டும். மாறாக, தேவை ஏற்பட்டால் ஒவ்வொரு துறையிலும் நான் கூறியது போன்று உதவியாளராக ஆகி விடுங்கள்.

அதே போன்று பார்க்கிங் இருக்கிறது. சில நேரங்களில் அதிக கூட்டம் ஏற்படுவதால் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அத்தகைய நிலைமைகளில் காரில் வரக்கூடியவர்கள் பொறுமை மற்றும் பரந்த மனப்பான்மையை ஏற்பாட்டாளர்களிடம் வெளிப்படுத்தியவாறு அவர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும். வரக்கூடிய உறுப்பினர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று சில சந்தர்ப்பங்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் இரு தரப்பிலிருந்தும் சில முறையீடுகள் வருகின்றன.

இதே போன்று நுழைவு வாயிலில் ஸ்கேனிங் ஏற்பாடு உள்ளது. அங்கு பொதுவாக நீண்ட வரிசை இருக்கின்றது. அங்கு பொறுமை மற்றும் சகிப்புத் தன்மை வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் சில சமயங்களில் ஒரு சிலரின் காரணமாக நிலைமை சீர்கெட்டு விடுகிறது. அங்கு ஒவ்வொருவரும் முழுமையான முறையில் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும். சிறிது நேரம் ஆனாலும் ஒரு பிரச்சனையில்லை. வரிசையில் வருவதனால் நல்ல விளைவுகள் வெளிப்படும்.

பிறகு நான் எப்போதும் இதை கூறி வந்துள்ளேன். அதாவது மாநாட்டுத் திடலில் அமரக் கூடியவர்கள் வலப் புறமும், இடப் புறமும் பார்வையை வைத்திருங்கள். அதே போன்று செல்லும் போம தமது சுற்றுச்சூழலின் மீது பார்வையை வைத்திருங்கள். பாதுகாப்பு

### திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் திருப்தியினைப் பெறுவதற்காகத் தமது உயிரையே விற்றுவிடுபவர்களும் மக்களுள் சிலர் உள்ளனர். (இத்தகு) அடியார்களிடம் அல்லாஹ் மிகுந்த பரிவுகாட்டக் கூடியவனாவான். (2:208)

Faizal Hameed Ilahi (Tittacherry)

### திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையாக கீழ்ப்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:109)

A.Basheer Ahmad (Melapalayam)

தொடர்பாக ஏற்பாட்டாளர்கள் தரப்பிலிருந்து எந்த வழிகாட்டல் வழங்கப்பட்டாலும் அதன்படி செயல்படுங்கள்.

இதை விட அதிகமாக ஜல்ஸாவின் வெற்றி மற்றும் நீங்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்ட நோக்கத்தை முழுமை செய்வதற்காகவும், எதிரியின் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பதற்காகவும் தொடர்ந்து துஆ செய்து கொண்டிருங்கள். ஜமாஅத்தின் வளர்ச்சி பொறாமையாளர்களை பொறாமையில் அதிகரிக்கச் செய்து கொண்டே இருக்கின்றது.

எனவே துஆவின் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துவது அவசியமாகும். இன்றைய நாட்களில் பாகிஸ்தான் அஹ்மதிகளின் நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் நிலைமைகள் எதிர்ப்பின் பக்கமே திரும்பும் நிலை இருப்பதைப் போன்றே தெரிகின்றது. அல்லாஹ் அவர்களுக்கும் அமைதிகரமான வாழ்க்கையை வழங்குவானாக. அல்லாஹ் அவர்களை ஒவ்வொரு தீங்களிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக. எதிரிகளின் பழைய அல்லது புதிய திட்டங்களை தோல்வியுறச் செய்வானாக.

இது மட்டுமின்றி ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ளவர்களுக்கு இதையும் நினைவூட்டிக் கொள்கின்றேன். அதாவது இந்த வருடமும் நமது பல்வேறு தலைமையகத் துறைகள் சார்பாக, ஆர்காயி துறை, ரிவியூ ஆஃப் ரிலிஜியன் துறை, மஹ்ஸனே தஸாவீர் துறை மற்றும் இதர துறைகள் சார்பாக அவர்கள் தமது கண்காட்சிக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளனர். மேலும் அது தெரிந்து கொள்கின்ற மற்றும் அறிவு ரீதியான கண்காட்சியாக இருக்கின்றது. அங்கும் சென்று பார்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

இது மட்டுமின்றி ஓர் அறிவிப்பும் உள்ளது. MTA International தரப்பிலிருந்து அவர்களது ஒரு புதிய App இன்று Launch ஆக உள்ளது. அது Smart Tv App ஆகும். எந்தவொரு நாட்டிலும் இந்த App மூலமாக Download செய்து LG, Philips, Amazon, Fire Tv, Sony மற்றும் Android TV ஆகியவற்றில் Dish Antona இல்லாமலேயே MTA வின் அனைத்து Channel ஐயும் MTA 1, MTA 2, MTA 3, MTA Arabia 3, MTA Africa ஆகியவற்றைப் பார்க்க முடியும். இது மட்டுமின்றி அல்லாஹ்வின் அருளால் அமெரிக்காவில் MTA முன்பிருந்தே Samsung PlotForm ல் உள்ளது. இதுவும் ஓர் அறிவிப்பாக இருந்தது.

அல்லாஹ்வின் அருளால் இந்த App மூலமாக வெளியில் உள்ளவர்களும் இதிலிருந்து பயன்பெற முடியும். இப்போது ஜுமுஆவிற்குப் பிறகு இதை நான் Launch செய்வேன். அல்லாஹ் எல்லா வகையிலும் ஜல்ஸாவை அருளுக்குரியதாக ஆக்குவானாக. மேலும் அனைவருக்கும் இதிலிருந்து முழுமையாகப் பயன் பெறுவதற்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக.

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:– www.alislam.org

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வும், வானவர்களும், மேகங்களின் நிழல்களில் தம்மிடம் வருவதையும், பிரச்சனைக்குத் தீர்ப்புச் செய்யப்படுவதையும் தவிர வேறெதனை அவர்கள் எதிர்பார்க்கின்றனர்? எல்லா பிரச்சனைகளும் அல்லாஹ்விடமே (தீர்ப்புக்காகத்) திரும்புகின்றன. (2:211)

M.Y. Shahul Hameed (Melapalayam)

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

பண்பட்ட நாகரீக இயல்புடையவராக இருந்தார்கள். எனினும் மிகவும் எளிமையான வாழ்க்கை முறையையே மேற்கொண்டார்கள். அவர்கள் கலீஃபா ஆவதற்கு முன்னுள்ள வாழ்க்கையில் வீட்டில் மேற்கொண்ட அந்த எளிமையான வாழ்க்கை வழிமுறைகள் இப்போதும் தொடர்கின்றன. அவர்கள் தனது வழக்கமான வேலைகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதை அனுமதிக்க மாட்டார்கள். அவர்கள் உண்ணும் உணவைக் குறித்து ஒருபோதும் குறைகூற மாட்டார்கள். உணவுகளை வீண்விரயம் செய்யப்படுவதை வெறுப்பார்கள்.

அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, ஒருமுறை நான் பெரிதும் உடல்நலக்குறைவுக்கு உள்ளானேன். கடுமையான தலைவலியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எனக்கால் காலை உணவு தயார் செய்தார்கள். பின்னர் தனக்கான காலை உணவை ஏற்பாடு செய்து விட்டு அவலுவலகம் சென்றார்கள். இப்போதும் கூட மிக அதிக வேலைப்பளு இருந்தபோதிலும் செடிகளை நடுகிறார்கள். தேவையற்ற இலை, கிழைகளை வெட்டி முறையாக செடியகளை வளரச் செய்கின்றார்கள். இதைப் போன்றே மற்றனைத்துப் பணிகளையும் தாமே செய்கின்றார்கள்.

என் மனதில் தோன்றியவற்றை நான் சுருக்கமாக குறிப்பிட்டுள்ளேன். நான் துஆவுடன் இதை முடிக்கின்றேன். நானும் எனது வருங்கால சந்ததியினரும் எப்போதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குறிக்கோளை நிறைவேற்றும் விதத்தில் கிலாஃபத்திற்கு முற்றிலும் கட்டுப்பட்ட விசுவாசமிக்க அடியார்களாக என்றும் இருந்துவர எல்லாம்வல்ல அல்லாஹ் அருள்புரிவானாக!

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் தலைமையின்கீழ் நமது ஜமாஅத் முன்னேற்றத்தின் ஒரு புதிய உயரத்தை எட்டட்டுமாக! மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின், “நாம் உம்மோடும் உமது குடும்பத்தோடும் இருக்கின்றேன்” என்ற முன்னறிவிப்பு அவர்களது ஆன்மீக மற்றும் பௌதீக சந்ததிகள் மீது தொடர்ந்து தீர்ப்பு நாள் வரை நிறைவேறிக் கொண்டிருக்கட்டுமாக! ஆமீன்.

ஆதாரம்: மர்யம் பத்திரிகை, ஜூலை–செப் 2018 ஆம் ஆண்டு பதிப்பு, பக்கம் 10–14

தமிழில்: J.S. சலீம் அஹ்மது (துணை அமீர், மேலப்பாளையம்)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நிராகரிப்பவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை அழகு வாய்ந்ததாகக் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களை எள்ளி நகையாடுகின்றனர். ஆனால் இறையச்சமுடையவர்கள் மறுமை நாளில் அவர்களை விட மேலானவர்களாக இருப்பர். அல்லாஹ், தான் விரும்புகின்றவர்க்குக் கணக்கின்றி வழங்குகின்றான். (2:213)

S.S.H.Muhammed Lebbai (Melapalayam)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஒரு முன்மாதிரி கணவர் ஆவார்கள்

இறைவேதங்களில் குறிப்பிட்டுள்ளபடி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கிலாஃபத் அமைப்பு நூறு ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. நாம் இப்போது கிலாஃபத்தின் ஐந்தாவது சகாப்தத்தில் இருந்து வருகிறோம். இப்போது எல்லாம் வல்ல இறைவன் தனது நியதிக்கேற்ப எனது துணைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் சாஹிப் (ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ், அல்லாஹ் அவர்களுக்கு உதவி புரிவானாக) அவர்களை கிலாஃபத் அமைப்பின் ஐந்தாவது வல்லமையாக இந்த பதவியில் நியமித்துள்ளான்.

பாகிஸ்தான் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் (இளைஞர்களுக்கான கிளை அமைப்பு) தேசியத் தலைவர், கிலாஃபத் அமைப்பின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தஷ்ஹீதுல் அஸ்ஹான் சிறப்பிதழ், ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பற்றிய ஒரு சிறப்பு பதிப்பு ஒன்றை வெளியிட விரும்புகிறது எனக் குறிப்பிட்டு எனக்கு எழுதியிருந்தார்.

இதற்காக, நான் **“ஹுஸூர் – ஒரு முன்மாதிரிக் கணவர்”** என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்ற அவரது ஆவலையும் தெரிவித்திருந்தார்.

எனவே நான் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் சிறப்பியல்புகள் சிலவற்றை இதில் கூறுவதோடு, அன்னார் கிலாஃபத் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முன்னுள்ள எனது சில நினைவுகளையும் எடுத்துக் கூறுவேன். இதன் அடிப்படையில், எனது மனதில் நிற்கும் விஷயங்களுள் சிலவற்றை எழுதுகிறேன்.

### வீட்டு வேலைகளில் நல்கிய முழுமையான ஒத்துழைப்பு

தமது வாழ்க்கையில் கலீஃபா என்ற நிலையை அடைவதற்கு முன்பே, ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தம்மை மார்க்கத் தொண்டாற்றுவதற்காக அர்ப்பணித்து இருந்தார்கள். இச்சேவையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, இரவும் பகலும் தமது நேரத்தை அதிலேயே செலவிடுவார்கள். அலுவலகப் பணிகள் இருந்தபோதிலும், வீட்டு வேலைகளிலும் அதிக ஆர்வம் செலுத்தியவாறு, தமது முழு ஒத்துழைப்பையும் நல்குவார்கள்.

1977 ஆம் ஆண்டு நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின்கீழ் அன்னார் கானா நாட்டில் அஹ்மதிய்யா மேல்நிலைப் பள்ளியின் முதல்வராக நியமிக்கப்பட்டார்கள். கானாவில் அவர்கள் பணிக்காக நியமிக்கப்பட்டு நாங்கள் அங்கு சென்றபோது அந்நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி இருந்தது. மழை பொய்த்ததன் காரணமாக பயங்கர வறட்சி நிலவியது. நாட்டின் நிலைமை அதீத கவலைக்கு ஆட்பட்டு இருந்தது.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடமுள்ள அனைத்து நல்ல பண்புகளிலும், மிகச்சிறந்த பண்புகளின் ஒன்று, நான் பெரிதும் மதித்துப் போற்றுவது, அவர்களிடம் சுயநலத்தின் சாயலைக் கூட ஒருபோதும் காணமுடியாது.**

அதிகமான வேலைப்பளுவும், அதிக பொறுப்புகளும் இருந்தபோதிலும், அவர்கள் என்னையும், குழந்தைகளையும் தம்மால் இயன்ற அளவுக்கு சிறந்த முறையில் கவனித்துக் கொள்வார்கள்.

உண்மை என்னவெனில், வக்ஃபே ஸிந்தகிகள் (வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள்) அவர்களது குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு, அவர்களின் துணைவியர்களும் தியாகம் செய்யவும், முழுவதும் பக்கபலமாக இருக்கவும் வேண்டும். குறிப்பாக, வக்ஃபே ஸிந்தகிகளுக்கு ஜமாஅத் வழங்கும் அந்த அருளுக்குரிய உதவித் தொகைக்குள் குடும்பத்தை நடத்தும் விஷயத்தில், கணவனின் ஒத்துழைப்பின்றி ஒரு வரை வரையறுக்கப்பட்ட ஊதியத்திற்குள் குடும்பத்தை நிர்வகிப்பதென்பது மனைவிக்கு ஒரு நிரந்தர போராட்டமாகவே இருக்கும்.

நான் சில குடும்பங்களில் பார்த்துள்ளேன். கணவனின் விருப்பத்தின்படி உணவும், உடனுக்குடன் சப்பாத்தியும் தயாரிக்கப்படும்; கணவனுக்காக பிரத்யேக உணவுகள் ஏற்பாடு செய்யப்படும் அதேவேளை மனைவியும், குழந்தைகளும் அப்போது மீதம் மிஞ்சியதை உண்ணுவர். ஆனால் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஒருபோதும் இத்தகையதொரு விருப்பத்தை வெளிப்படுத்தியதோ, இதுபோன்று கேட்டு வற்புறுத்தியதோ கிடையாது.

இவ்வாறு ஒருபுறம் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் மீது பாராட்டும், உயர் மதிப்பும் என் மனதில் அதிகரித்துக் கொண்டிருந்தது. மறுபுறம், வாழ்க்கையை அர்ப்பணித்த சிலர் குடும்ப விஷயம் என்று வரும்போது எவ்வித தியாகமும் செய்யாதிருப்பதை எண்ணி நான் வியப்படைந்துள்ளேன். மாறாக, அவர்கள் அவர்களது மனைவிகளிடமும், குழந்தைகளிடமும் தியாகத்தைக் கண்டிப்புடன் எதிர்பார்த்தனர்.

வடக்கு கானாவின் டமாலியில் அமைந்துள்ளது. அஹ்மதிய்யா விவசாயப் பண்ணையின் நிர்வாகியாக ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இருந்தார்கள். அப்போது அவர்கள் அந்த நாட்டின் வரலாற்றிலேயே முதன் முதலாக கோதுமையை பயிரிட்டு வளரச் செய்து வெற்றி கண்டார்கள். விவசாய மேம்பாட்டிற்காக டமாலியில் நாங்கள் இரண்டு ஆண்டுகள் வசித்து வந்தோம். கானாவின் வட பகுதிகளுக்கு டமாலி தலைமையிடமாக இருந்து வந்தது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அவ்வப்பொழுது, பயிரிடும்போதும், அறுவடை செய்யும் சமயங்களிலும் இரண்டு மூன்று இரவுகள் உள்ளூர் கிராம மக்கள் பகுதியின் குடிசைகளில் தங்குவார்கள். அத்தகைய நாட்களில் அவர்கள் அனைத்து விதமான கஷ்டங்களையும் மகிழ்ச்சியுடன் பொறுத்துக் கொள்வார்கள். மேலும் அவர்கள் வீட்டு வேலைகளிலும் எனக்கு எல்லா விதத்திலும் உதவி புரிவார்கள். வெளியிடங்களிலிருந்து தண்ணீர் சுமந்து கொண்டு வருவார்கள்.

கானாவில் எப்பொழுதும் தண்ணீர் பற்றாக்குறை இருந்து வந்தது. நாங்கள் வீட்டிற்கு வெளியே தண்ணீர் தொட்டி வைத்திருந்தோம். தண்ணீர் லாரி வரும்பொழுது அது நிரப்பப்படும். எங்களுடைய சமையலறை மற்றும் குளியலறையில் பெரிய பிளாஸ்டிக் டிரம்கள் இருந்தன. ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தினசரி சுபுஹ் தொழுகைக்குப் பின்னர், வாளி மூலம் தண்ணீர் சுமந்து வந்து இந்த டிரம்களை நிரப்புவார்கள். அவர்களுக்கு எவ்வளவு அவசர பணிகள் இருப்பினும், நேரமின்மையைக் காரணம் காட்டி, அந்த டிரம்களை நிரப்பிக் கொள்ளுமாறு என்னிடம் அவர்கள் ஒருபோதும் கூறியதில்லை. எனக்கு உடல்நலமின்மை ஏற்படும் போதெல்லாம், எங்களுக்கு சமையல் செய்யும் பொறுப்பை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். எங்களது குழந்தைகளுக்குத் திருக்குர்ஆனை கற்றுக் கொடுப்பதில் அவர்கள் எனக்குப் பெரிதும் உதவுவார்கள்.

**வல்லமைமிக்க இறைவன் மீது முழுமையான நம்பிக்கை**

நாங்கள் டமாலியில் (கானாவின் வடபகுதி) குடியேறிய சிறிது காலத்திற்குள் மருத்துவமனைகளில் மருத்துவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நடந்தது. மருத்துவர்கள் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மட்டுமே மருத்துவமனைக்கு பணி செய்ய வருவர். இந்த நேரம் தவிர மற்ற நேரங்களிலும், வார விடுமுறை நாட்களிலும் எந்த மருத்துவ ஊழியர்களும் மருத்துவமனைகளில் இருக்க மாட்டார்கள். பிறந்து இரண்டு நாட்கள் மட்டுமே கழிந்திருந்த நிலையில் எங்களது மகன் வகாஸ் (அல்லாஹ் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவானாக!) அப்போது வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டார்.

எங்களது புதிய சூழல், பற்றாக்குறையான மருத்துவ வசதிகள் மற்றும் மருத்துவர்களின் வேலை நிறுத்தம் ஆகிய காரணங்களினால் உண்மையிலேயே அது ஒரு மிகுந்த கவலைக்குரிய சூழ்நிலையாக இருந்தது. அவ்வளவு சிறியதோர் பச்சிளம் குழந்தை படும் வேதனையை பார்த்துக் கொண்டு எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எங்களது மகள் ஃபராவும் (அல்லாஹ் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவானாக!) அப்போது மிகவும் இளைய வயதுடைய சிறுமியாக இருந்தாள். நான் பாகிஸ்தானிலிருந்து சில மருந்துகள் கொண்டு வந்திருந்தேன். அவற்றின் வீரியம் மிகவும் அதிகமாகும். மருத்துவர்கள் இந்த அளவு சிறிய குழந்தைக்கு இத்தகைய வீரியமிக்க மருந்துகளை ஒருபோதும் பரிந்துரைக்க மாட்டார்கள்.

ஆயினும் அந்த சூழலில் நாங்கள் பெரிதும் கவலைக்குள்ளாகி இருந்தோம். அப்போது அவர் (வகாஸ்) வயிற்றுப்போக்கின் காரணமாக மிகவும் பலவீனமாக இருந்தார். பால் அருந்தக்கூட இயலவில்லை. எல்லாம் வல்ல இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து, அவனிடம் துஆ செய்து, ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது வலக்கரத்தின் ஒரு விரலை அந்த மருந்தினுள் மூழ்கவிட்டு எடுத்ததன் பின், வகாஸ் அவர்களுக்கு இருமுறை கொடுத்து விட்டு அல்லாஹ்வின் நாட்டம் என்னவென்பது யாருக்கும் தெரியும் எனக் கூறினார்கள்.

இதுவரை பரிசோதித்திராத நிவாரணியாக அது இருந்தபோதிலும் எங்களது கவலை அதற்குப் பிறகு நீடிக்கவில்லை. சில நிமிடங்களில், வகாஸ் அவர்களின் உடல்நிலை படிப்படியாக முன்னேற்றமடைந்தது. வல்லமைமிக்க இறைவன் அற்புதமான முறையில் அவர்களை குணப்படுத்தினான். அல்ஹம்துலில்லாஹ். (அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும்)

குழந்தைகள் நோயுற்ற வேளைகளில், ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எனக்கு அனைத்து விதத்திலும் உதவி செய்வார்கள். கூட்டங்கள் நடக்கும் பொழுது எங்களது வீட்டில் ஜமாஅத் சகோதரர்கள் ஒன்று கூடுவர். அப்போது நான் ஆண்கள் அமர்ந்திருக்கும் சபையை கடந்து சமையலறைக்கு செல்ல வேண்டிய நிலை இருந்ததால், ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தாமே குழந்தைகளின் பால் பாட்டிலை கழுவித் தருவார்கள்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மீது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கொண்டிருந்த அன்பு**

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். அன்னார் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடன் அன்புடனும் நேசத்துடனும் பரிமாறிக் கொள்வார்கள். நாங்கள் கானாவில் இருந்தபோது, ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் பெற்றோர்கள் (ஹஸ்ரத் மிர்ஸா மன்ஸூர் அஹ்மது சாஹிப் மற்றும் ஹஸ்ரத் செய்யிதா அபா நாஸிரா பேகம் சாஹிபா) USA வில் வசித்து வந்த அவர்களது இளைய மகன் மிர்ஸா மக்ஃபூர் அஹ்மது சாஹிப் (ஹுஸூர் அவர்களின் இளைய சகோதரர்) அவர்களை சந்திக்கச் சென்றார்கள்.

அவர்கள் அமெரிக்காவிற்குச் பயணம் மேற்கொண்டிருந்த நாட்களில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களிடமிருந்து ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் அவர்கள், தனது சொந்த கரத்தினால் தனிப்பட்ட குறிப்பு ஒன்றை இவ்வாறு எழுதியிருந்தார்கள்.

**“எனது அன்பிற்குரிய சகோதரரும், சகோதரியும் (அதாவது ஹுஸூர் அவர்களின் பெற்றோர்கள்) தற்போது அமெரிக்கப் பயணத்தில் இருக்கின்றார்கள். மார்க்கத்திற்காகக் கடினமாகத் தொண்டாற்றும், வாழ்க்கையை அர்ப்பணித்த எனது மகனைப் பற்றிய எந்த செய்தியேனும் அவர்கள் பெற்றிருப்பார்களா இல்லையா என்பதையும், தங்களைப் (ஹுஸூர்) பற்றிய நினைப்பாவது அவர்களின் மனதைக் கடந்து சென்றிருக்குமா என்பதையும் எண்ணி நான் வியப்பில் ஆழ்கிறேன். அவர் தனது மார்க்கத்திற்காக ஆப்ரிக்கா காட்டில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். எப்படியிருப்பினும், எனது இந்த வீரமிக்க மகன் எனக்கு மிகவும் பிரியமானவராக இருக்கின்றார்.”**

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மீது கொண்டிருந்த எல்லையில்லா அன்பையும் நேசத்தையும் இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

**தவ்ஹீது (ஏகத்துவம்) குறித்த மிகச்சிறந்த படிப்பினை**

எங்களது குழந்தைகள் கானாவில் பள்ளியில் சேர்க்கப்பட்டபோது, அது கிறித்தவ கொள்கைகள் போதிக்கப்பட்டு வந்த ஒரு புரொடஸ்டன்ட் பள்ளிக்கூடமாக இருந்தது. எனவே இயேசு, கடவுளின் குமாரர் என்ற நிலையில் எப்பொழுது ஆராதனைகள் பாடப்பட்டாலும் அல்லது ஷிர்க்கின் (இறைவனுக்கு இணை வைத்தல்) எந்த ஒரு அம்சம் அதில் தென்பட்டாலும் அதை அவர்கள் பாடக்கூடாது என்று ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எங்களது குழந்தைகளுக்கு அறிவுரை கூறியிருந்தார்கள். பள்ளியின் அவைக்கூட்டத்தில் இத்தகைய ஆராதனைகள் பாடப்பட்டன.

பள்ளியின் முதல் நாளன்று, குழந்தைகள் இந்த ஆராதனைகளை பாடாததன் காரணமாக, இதற்குத் தண்டனையாக பிரம்பால் அடிக்கப்பட்டு வீடு திரும்பினர்.

அதற்கு ஹுஸூர் அவர்கள், **“என்ன நடந்தாலும் பரவாயில்லை; அவர்கள் அத்தகைய ஆராதனைகளைப் பாடக்கூடாது”** என்று குழந்தைகளுக்கு விளக்கிக் கூறி நம்பிக்கையூட்டினார்கள். தொடர்ந்து மூன்று நாட்களாக குழந்தைகள் இதற்காக தண்டிக்கப்பட்டு சோதனைக்குள்ளாயினர்.

நான்காவது நாள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தாமே பள்ளிக்கு நேரில் சென்று தலைமை ஆசிரியரிடம், **“நாங்கள் முஸ்லிம்களாக இருக்கின்றோம். ஓரிறைவனை மட்டும் வணங்குபவர்களாக இருக்கின்றோம். நாங்கள் இயேசுவை இறைவனது தூதர் என்று நம்புகிறோம். ஆனால் கடவுளின் குமாரராக அல்ல. இந்த காரணத்தினால் எனது குழந்தைகள் பள்ளியின் இத்தகைய ஆராதனைகளை பாடமாட்டார்கள்”** என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட தலைமை ஆசிரியர், எங்களது பாடத்திட்டத்தில் பைபிள் கற்பது ஒரு கட்டாயப் பாடமாக உள்ளது. (உங்களது குழந்தைகள் இதை படிக்காவிட்டால்) அவர்கள் தேர்ச்சி பெற மாட்டார்கள் என்று கூறினார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள், **"இந்தப் பாடப்பகுதிகள் சம்பந்தமாக எனது குழந்தைகள் எழுதும்போதெல்லாம் கிறித்தவக் கண்ணோட்டம் இன்னின்னவாக உள்ளது என்று எழுதுவார்கள்"** என்று பதிலளித்தார்கள்.

இதை ஏற்றுக் கொண்ட தலைமை ஆசிரியர், குழந்தைகள் இனி ஆராதனைகள் பாடாமல் இருக்க அனுமதி வழங்கினார்கள். இவ்வாறு மிகுந்த ஞானத்துடன் பரஸ்பர ரீதியில் புரிதலை ஏற்படுத்தி இந்த பிரச்சனையை சுமூகமாகத் தீர்த்தார்கள். ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தனது குழந்தைகளுக்கு தவ்ஹீது குறித்து கற்பித்த முதல் பாடமாக இது இருந்தது.

**ஷரீஅத்தைப் பற்றோடு பின்பற்றுதல்**

கானாவில் எங்களது அண்டை வீட்டாரில் ஒருவர் ராணுவ தளபதியாக இருந்தார். ஒருநாள் அவர் ஒரு மதுபான பாட்டிலை எங்களது ஃபிரிட்ஜில் வைப்பதற்காக கொடுத்து அனுப்பினார். ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அவ்வாறு செய்வதற்கு மறுத்து விட்டார்கள். இதனால், அவர் கோபமடைந்தவாறு எங்களது வீட்டிற்கு வந்து அதிவேகத்துடன் கதவைத் தட்டினார். ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கதவைத் திறந்து, அவரை வீட்டிற்குள் வரவழைத்து அமரச் செய்தார்கள். அவர் ஏன் கோபமாக இருந்தார் என விசாரித்தார்கள்.

அந்தத் தளபதி, பயன்படுத்தாத ஒரு புதிய மது பாட்டிலை உங்களது ஃபிரிட்ஜினுள் வைப்பதால் என்ன தீங்கு நேர்ந்து விடப்போகிறது என்று கேட்டார்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அந்த ராணுவத் தளபதியிடம், **"மது அருந்துபவரும், பிறருக்கு மது அளிப்பவரும், மதுவை தயாரிப்பவரும், மதுவை பாதுகாத்து அல்லது சேகரித்து வைப்பவரும், மதுவை விற்பவரும் நரகத்திற்கு உரியவர்கள் என்று எங்களது தூய தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே இப்போது நீங்களே முடிவு செய்யுங்கள். நான் நரக நெருப்பிற்குரியவர்களுடன் இருக்க வேண்டுமா? நிச்சயமாக இல்லை"** என்று கூறினார்கள். இதைக் கேட்டு அந்த தளபதியின் கோபம் தணிந்தது. வருத்தம் தெரிவித்து விடைபெற்றார்.

எல்லாவற்றையும் அமைதியாக கவனித்து, அதன் பின்னர் தீர்க்கமான முடிவெடுப்பது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் வழக்கமாக இருந்தது.

ஓர் ஆசிரியர் ஒருமுறை இதைப் பற்றி கூறினார்: **"தாங்கள் எப்போதும் அமைதியாகவே இருப்பதாக தோன்றுகிறது. ஆயினும், அனைத்தையும் அதிக அளவில் உன்னிப்பாகக் கவனிப்பவராக இருக்கின்றீர்கள்."**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது செயல்பாடுகளை மிகவும் வெளிப்படையாக காண முடியாது. எனினும் அவர்கள் அவர்களது உறவினர்கள் மீது அமைதியான முறையில் குறிப்பான கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள். அவ்வாறு செய்வதை இப்போதும் தொடர்கின்றார்கள்.

**நான் ஏதேனும் சில பிரச்சனைகளினால் கவலைக்கு ஆளானால் பொறுமையையும் துஆவையும் கைக்கொள்ளுமாறு என்னிடம் கூறுவார்கள். அதன் மூலம் அல்லாஹ்வின் புறமிருந்து கிடைக்கும் மாபெரும் அருட்களுக்கு நானே சாட்சியாக இருக்கின்றேன். நான் கஷ்டங்களை சந்திக்கும் போதெல்லாம் அவர்கள் எனது மன உறுதியை ஊக்கப்படுத்துவார்கள். என் மீதுதான் தவறென்று அவர்கள் ஒருபோதும் கூறியதில்லை. மற்றவர்களோடும் அவர்கள் மன இறுக்கத்தை வெளிப்படுத்தியதில்லை. யாராவது அவர்களுக்குத் துன்பமிழைத்தால் இந்த கவிதை வரிகளை படிப்பார்கள்.**

***உங்களோடு என்னை நானும் இணைத்துக் கொள்வதா?***
***நானும் பாக்கியமற்றவராய் மாறிவிடவா?***

**கிலாஃபத்திற்கு கட்டுப்படுதல்**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் இயல்பு, காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுதலோடு ஒன்றியிருந்தது. கலீஃபாவின் தரப்பிலிருந்து கிடைக்கப் பெறும் சிறி அறிகுறியைக் கூட கட்டுப்படுவதற்கான கட்டளையாகவே கருதுவார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் மீது, ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கொண்டிருந்த நேசமும் நெருக்கமும் முழுமையான மதிப்புடன் பிணைந்து இருந்தது.

அதேபோன்று, ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் மீது பிரத்யேக அன்பும் நேசமும் கொண்டிருந்ததோடு, அவர்கள் மீது அதிக அக்கறை செலுத்தி வந்தார்கள். சிறு வயதிலிருந்தே எந்த ஒரு சூழ்நிலையிலும் தனது விருப்பத்தை வெளிப்படையாகக் காட்டிக்கொள்வது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் இயல்பில் இல்லையென்றாலும், உணவு வகையில் அவர்களுக்கு புரோட்டா நன்கு பிடிக்கும் என்பதை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அறிந்திருந்தார்கள்.

கானாவின் தேசிய மற்றும் பொருளாதார சூழ்நிலையை செய்தியின் வாயிலாக அனைவரும் அறிந்திருந்தனர். இதன் பின்னணியில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு மிகவும் பிரியமான ஒரு கடிதம் எழுதினார்கள்.

அதில், **"மஸ்ரூர் அவர்கள் புரோட்டா சமைப்பதற்கு அங்கு ஆயில் கிடைக்கிறதா இல்லையா என்பதை இறைவன் மட்டும்தான் அறிவான்"** என்று குறிப்பிட்டார்கள்.

இதற்குப் பதில் எழுதும்போது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், **"நாங்கள் சாப்பிடுவதற்கு அன்னாசிப்பழம், வாழைப்பழம் போன்றவை இருக்கின்றன"** என எழுதினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், **"தாங்கள் நற்பாக்கியம் பெற்றவர் ஆவீர்கள். அன்னாசிப்பழத்தின் விலை இங்கு மிக அதிகம்"** என நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்கள்.

'கானாவில் உங்களுக்கு என்ன கிடைக்கிறது' என ஹஸ்ரத் செய்யிதா அபா சாஹிபா அவர்கள் கேட்டபோது, **"எல்லாம்வல்ல அல்லாஹ்வின் கருணை"** என ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் உணர்வுப்பூர்வமாக பதிலுரைத்தார்கள்.

எனது மகள் ஃபரா சாஹிபா (அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக!) அவர்களுக்கு பித்தப்பை அறுவை சிகிச்சை

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 05 Sep 2019 Issue No. 36

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

செய்யப்பட்டபோது, நாங்கள் அவர்களது குழந்தைகள் இருவரையும் கவனித்துக் கொண்டோம். அப்போது மன்ஸூர் (ஹுஸூர் அவர்களின் பேரர்) அவர்களுக்கு விளையாட்டுக் காட்டுவதற்காக ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பல மணி நேரங்கள் அவருடன் நடந்தே தனது நேரத்தை இதற்காகச் செலவிட்டார்கள்.

**காதியான் பயணம்**

1991 ஆம் ஆண்டு நாங்கள் காதியான் செல்ல ஏற்பாடுகள் செய்தோம். எனது தாயார், எனது தகப்பனார், எனது மாமி அம்மத்துல் நஸீர் மற்றும் எனது பாட்டி ஃபர்கன்தா ஷா சாஹிபா ஆகியோர் எங்களோடு இணைந்து வந்தனர். எனது சகோதரர் காசிம் சாஹிபும் எங்களுடன் வந்தார்.

எனது மாமி மற்றும் பாட்டியை கவனித்துக் கொள்ளும் பொறுப்பை அவர்கள் பார்த்துக் கொண்டார்கள். மற்ற அனைவரையும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கவனித்துக் கொண்டதுடன், பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் முழுப் பொறுப்பேற்று செய்தார்கள். அனைத்து சுமைகளையும் கட்டுவது, படுக்கைகளை சுருட்டிக்கட்டி தயார் செய்தது, மேலும் தேவையான மற்றனைத்து ஏற்பாடுகளையும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களே செய்தார்கள். எங்களது பயணத்தின்போதும், அங்கிய தங்கிய நாட்களிலும் என்னுடன் இணைந்து மூத்தவர்களை கவனிப்பதில் பெரும் பங்கு ஆற்றினார்கள்.

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் மீதிருந்த உயர்மதிப்பும் கண்ணியமும்**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் மீது ஒப்பற்ற மதிப்பு வைத்திருந்தார்கள். தனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து மரியாதை செலுத்தினார்கள்.

ஒருமுறை, நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுடன் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தபோது, அவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக பேசிக்கும் கொண்டிருக்கும்போதே குனிந்தவாறு சிரம் தாழ்த்திய நிலைக்குச் சென்றார்கள். அப்போது ஒரு மனிதர் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம், யாரிடம் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தீர்கள் என்று கேட்டபோது, அது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) என அவர்கள் பதிலளித்தார்கள்.

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுதல்**

அனைத்து விஷயங்களிலும், ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அவர்கள் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் அனைத்து அறிவுரைகளின்படி செயலாற்றியதுடன், அவற்றை முழுமையாக நிறைவேற்றவும் செய்தார்கள். அதன்படி செயலாற்றுவதில் ஒரு சிறு மாறுதல் நிகழ்வதைக்கூட அனுமதிக்க மாட்டார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் நோயுற்றிருந்தபோது தன்னைச் சந்திப்பதற்காக யாரும் இங்கு வரவேண்டியது இல்லை என அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய உடல்நலம் படிப்படியாகக் குன்றி கவலைக்குரிய சூழ்நிலை உருவானது. ஜமாஅத் உறுப்பினர்களும் கவலைக்குள்ளாயினர்.

மியான் செய்ஃபி (மிர்ஸா சஃபர் அஹ்மது சாஹிப்) அவர்கள், கலீஃபா அவர்களின் உடல்நிலை வேகமாக மோசமான நிலையை நோக்கி சென்று கொண்டிருப்பதை அறிந்து, ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த நிலையைக் குறித்து தெரிவித்ததுடன், ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இங்கு வருவது சிறந்தது எனவும் கேட்டுக் கொண்டார்கள்.

எனவே ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் லண்டனுக்குச் சென்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களை சந்தித்தார்கள். இவர்களைப் பார்த்ததும், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், ஏன் இங்கு வந்துள்ளீர்கள்? எனக் கேட்டார்கள். அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், "ஜமாஅத் உறுப்பினர்கள் தங்களது உடல்நிலையைக் குறித்து பெரிதும் கவலைக்குள்ளாகி உள்ளனர். எனவே தங்கள் நலம் விசாரிக்க வந்துள்ளேன்" எனக் கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், "இப்போது எத்தகைய சூழ்நிலையாக இருக்கின்றதென்றால் தாங்கள் உடனடியாக திரும்ப வேண்டும்" என்று கூறினார்கள்.

எனவே ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், "நல்லது. நான் உடனடியாக திரும்பி விடுவதற்கு டிக்கட் பதிவு செய்து விடுகிறேன்" என்றார்கள்.

பிறகு நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், மியான் செய்ஃபி சாஹிப் அவர்களிடம், "அவர் (ஹுஸூர் அவர்கள்) எந்த அளவு கட்டுப்படுதலை பேணக் கூடியவர் என்றால் என்னுடைய அனுமதியில்லாமல் அவரால் இங்கு வர இயலாது. இவ்வாறிருக்க, எப்படி அவர் இங்கே வந்தார்?" எனக் கேட்டார்கள்.

அதற்கு மியான் சாஹிப், தாமே அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இங்கே வருமாறு கேட்டுக் கொண்டதாகவும், அதன் அடிப்படையில்தான் அவர் இங்கு வந்துள்ளார் எனவும் பதிலளித்தார்கள்.

இதைக் கேட்டதும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், தமது வீரமிக்க புதல்வரின் அந்த உயர்அளவிலான கட்டுப்படும் அன்பு, தம்முடைய எதிர்பார்ப்பிற்கு இணங்க அப்படியே இருப்பதை எண்ணி பெருமிதம் அடைந்தார்கள். ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மிகவும்

*(தொடர்ச்சி 8 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad